A-4

**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்பு (2011–12 ஆம் ஆண்டு) – காந்தி நினைவுப் பரிசு – மாவட்ட அளவில் 12–ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை உயர்த்தி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை ( நிலை) எண்:116 | நாள் : 16.11.2011

ஐப்பசி 30, திருவள்ளுவராண்டு 2042

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.439, சமூக நலத்துறை, நாள் 27.05.1975.
2) அணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.22/12935/2011, நாள் 08.06.2011.

-----

ஆணை :

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், காந்தி நினைவுப் பரிசு மாவட்ட அளவில் 12–ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்று தொடர்ந்து மேல்நிலை கல்வி பயிலும் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் ஆண்டிற்கு ரூ.1500/–ம் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு (படிப்பைத் தொடர்ந்தால்) ஆண்டிற்கு ரூ.1000/– வீதம் வழங்கி ஆணையிடப்பட்டது.

2) இதனை தொடர்ந்து ஆதிதிராவிடர் நல ஆணையர் தமது 08.06.2011 நாளிட்ட கடிதத்தில் (2011–12 ஆம் ஆண்டில் காந்தி நினைவு பரிசுத் தொகையானது) மேல்நிலைப் பள்ளி (+2) பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்று மேல்நிலைப் படிப்பினைத் தொடரும் இந்து ஆதிதிராவிடர் வகுப்பினைச் சார்ந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு காந்தி நினைவுப் பரிசாக முதல் ஆண்டுக்கு ரூ.1500/–ம் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு ரூ.1000/– வீதம் வழங்கப்பட்டு வருவதை 2011–2012 ஆம் ஆண்டு முதல், முதல் ஆண்டுக்கு ரூ.2000/– எனவும் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு ரூ.1500/– வீதமும் ஆகவும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3) 2011–12 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் :–

> “பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிரரவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மேற்படிப்பினைத் தொடர, அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ / மாணவிகளுக்கு முதல் வருடத்திற்கு ரூ.1500/–ம் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/–ம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை இந்த நிதியாண்டு முதல் (2011–12) முதல் வருடத்திற்கு ரூ.2000/– எனவும், அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500/– எனவும் உயர்த்தி வழங்கப்படும்”

4) ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று 2011–12 ஆம் கல்வி ஆண்டு முதல் மாவட்ட அளவில் 12–ஆம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு வழங்கப்படும் காந்தி நினைவு பரிசுத் தொகையினை முதல் ஆண்டிற்கு ரூ.1500/–லிருந்து ரூ.2000/–ஆகவும் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றிற்கு ரூ.1000/–லிருந்து ரூ.1500/– ஆகவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

5) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – I திட்டத்தில் சேராதது – AB கல்விச் சலுகைகள் – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 – ஏனையவை
(குதொகு 2225 01 277 AB 1293)"

7) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.79/AD&TW/2011, நாள் 16.11.2011 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:–
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:–
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ப. ஜெயபாலன் 16/11/11
பிரிவு அலுவலர்